# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

1415
22 JUL 2026

**அமைப்பு விதி (யாப்பு)**

**1. கட்சியின் இலக்கு -**

1.1. இலங்கையில் தமிழ் மக்களினது நியாயமானதும் அடிப்படை யானதுமான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைகளை, ஒரு தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சமஷ்டி அமைப்பு முறையிலான அரசியலமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளுதல்.

1.2. மூன்று தசாப்த கால யுத்தம் காரணமாக சிதைவுற்றிருக்கும் தாயகப் பிரதேசத்தை நிரந்தரமானதும் நீடித்து நிலைக்கக் கூடியதுமான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் புனருத்தாரணம் செய்தல்.

1.3. நாட்டின் ஏனைய சமூகங்களினது அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தவும், சமூக நீதியை பேணவும் அனைத்து விதமான அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் போராடுதல்.

1.4. சர்வதேச ரீதியில் இன, மத, வர்க்க அடிப்படையில் ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் சமூகங்களின், அடிப்படை உரிமைகள் மற்றும் சமூக நீதிக்கான போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்.

1.5. மேற்கூறிய இலக்குகளை அடைவதற்கு, வன்முறை தவிர்ந்த, சாத்தியமான அனைத்து வழிமுறைகள் ஊடாகவும் செயற்படுதல்.

**2. கட்சியின் உறுப்புரிமை -**

2.1. கட்சியின் இலக்கு, அதனை அடைவதற்கான கட்சியின் யாப்பு ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும், பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரஜைகள் யாவரும் கட்சியின் உறுப்பினராக தகுதியுடையவர்கள்.

2.2. கட்சியில் இணைக்கப்படுபவர்கள் சாதாரண உறுப்பினர் களாகவும், ஆயுட்கால உறுப்பினர்களாகவும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். சாதாரண உறுப்பினர்களாயின் ஆண்டுச் சந்தாவாக ரூ 100/- ம், ஆயுட்கால உறுப்பினர்களாயின் ஆயுட் சந்தாவாக ரூ 1000/- ம் செலுத்துதல் வேண்டும்.

2.3. சாதாரண கட்சி உறுப்புரிமையானது ஆண்டின் தை மாதம் 01 ம் திகதி முதல் மார்கழி மாதம் 31ம் திகதி வரையான காலப்பகுதிக்கே செல்லுபடியாகும்.

2.4. மேற்கூறப்பட்ட வகையில் கட்சியின் உறுப்புரிமை பெற்றவர்கள் மட்டுமே பொதுச்சபை, மத்தியகுழு, மாவட்ட நிர்வாகக்குழு ஆகியவற்றில் அங்கம் வகிக்கவோ, தெரிவில் ஈடுபடவோ தகுதி உடையவர்களாவர்.

**3. கட்சியின் மத்தியகுழு -**

3.1. கட்சியின் உயர் அங்கமான மத்தியகுழுவில் இருபத்தொன்பது (29) உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர்.

அ) இவர்களில், ஏழு (07) பேர் பதவிகளின் அடிப்படையில், சிரேஷ்டத்துவத்தின் பிரகாரம் பொதுச்சபை உறுப்பினர் களால் தெரிவு செய்யப்படுவர். கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர், தேசிய அமைப்பாளர், சிரேஷ்ட துணைத் தலைவர், துணைத் தலைவர், துணைச் செயலாளர் ஆகிய பதவிகளுக்காக தெரிவு செய்யப்படுகின்ற அந்த ஏழு பேரும் கட்சியின் நிர்வாக சபை உறுப்பினர்களாவர்.

ஆ) மேற்கூறப்பட்ட ஏழு நிர்வாக சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கி, மத்தியகுழுவிற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய இருபத்து மூன்று (23) உறுப்பினர்களும் ஒவ்வொரு மாவட்டம் சார்ந்த பொதுச்சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுவர்.

பொதுச்சபையின் மொத்த உறுப்பினர்களுக்கும், கட்சியின் மாவட்ட ரீதியான உறுப்பினர்களுக்குமான விகிதத்திற்கமைய, மத்தியகுழுவிற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய இருபத்து மூன்று (23) உறுப்பினர்களில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது.

இ) மேற்கூறப்பட்ட இருபத்து மூன்று (23) உறுப்பினர் களாலும், மத்திய குழுவின் மீதமுள்ள ஆறு (06) உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுவர்.

3.2. நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவின்போது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்ற நிலைமை ஏற்படும் பட்சத்தில் இரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

3.3. மத்தியகுழுவின் உறுப்பினர்களுக்கு இளைஞர் அணிப் பொறுப்பாளர், மகளிர் அணிப் பொறுப்பாளர், சமூக மேம்பாட்டுக் கழக பிரதிநிதி, ஊடகப் பிரிவுப் பொறுப்பாளர், ஊடகப் பேச்சாளர் ஆகிய பொறுப்புகள் வழங்கப்படும்.

3.4. நிர்வாக சபையில் பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.5. மத்திய குழுவானது தலைவரின் தலைமையில் அல்லது சிரேஷ்ட துணைத் தலைவரின் தலைமையில் அல்லது துணைத் தலைவரின் தலைமையில் கூடும்.

3.6. மத்தியகுழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூட வேண்டும். மத்தியகுழு கூடத் தவறும் பட்சத்தில் அதற்கான காரணத்தை செயலாளர் அனைத்து மத்தியகுழு உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

3.7. தொடர்ச்சியாக மூன்று மத்திய குழுக் கூட்டங்களிற்கு சமூகமளிக்காத உறுப்பினரிடம் விளக்கம் கோரப்படும். சமூகம் அளிக்காமைக்கான காரணம் பொருத்தமற்றதாக இருப்பின் மத்தியகுழுவின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கைக்கு குறையாத உறுப்பினர்களின் அனுமதியுடன் அவரது மத்தியகுழு உறுப்புரிமை நீக்கப்படும்.

3.8. மத்திய குழுவில் உறுப்பினர் பதவி வெற்றிடமாகின், அடுத்ததாக நடக்கும் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கைக்கு குறையாத உறுப்பினர்களின் அனுமதியுடன் புதியவர் ஒருவர் நியமனம் செய்யப்படுவார்.

3.9. ஒரு மத்தியகுழு உறுப்பினர் தனது மூன்றாண்டு பதவிக் காலத்தில் நடைபெற்ற மத்தியகுழுக் கூட்டங்களில் பாதி எண்ணிக்கைக்கும் அதிகமான கூட்டங்களில் கலந்து கொண்டிராவின் அடுத்த பொதுச்சபைக் கூட்டத்தின் பின்னர் அமையும் புதிய ப்பமத்தியகுழுவில் உறுப்புரிமை பெற தகுதியற்றவராகின்றார்.

3.10. விசேட தேவையைக் குறிப்பிட்டு, மத்தியகுழுவின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் செயலாளர் மத்தியகுழுவைக் கூட்ட வேண்டும்.

3.11. மத்திய குழுவானது, காலத்தின் தேவை கருதி, தேர்தல் நடவடிக்கைக் குழு, ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றை நியமனம் செய்யமுடியும்.

3.12. மத்தியகுழுவின் கூட்ட நிறைவு எண் (கோரம்), மத்தியகுழுவின் இருபத்தொன்பது (29) உறுப்பினர்களின் இரண்டில் ஒன்று பங்கு எண்ணிக்கைக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

**4. நிர்வாகசபை உறுப்பினர்களின் கடமைகள் -**

**4.1. தலைவர் -**

அ) கட்சியின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பொறுப்புக் கூறுபவராக செயற்படுவார்.

ஆ) தேவையான சந்தர்ப்பத்தில், குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புகளை சிரேஷ்ட துணைத் தலைவர் அல்லது துணைத்தலைவர் நிறைவேற்றிக் கொள்ள ஏதுவாக அதிகாரங்களை வழங்குவார்.

**4.2. செயலாளர் -**

அ) உரிய காலத்தில் அறிவித்தல் விடுத்து மத்தியகுழு, பொதுச்சபை ஆகியவற்றைக் கூட்டுதல், அக் கூட்டங்களினதும் வரவுகளைப் பதிவு செய்தல் மற்றும் கூட்ட அறிக்கையினை தயாரித்தல் ஆகிய பொறுப்புகளைக் கொண்டிருப்பார் .

ஆ) நடப்பு பொதுச்சபையின் செயற்பாடுகள் அடங்கிய செயற்பாட்டறிக்கையை தயாரித்து அடுத்த பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்பிப்பார்.

இ) கட்சி உறுப்பினர்களின் அங்கத்துவப் படிவங்கள், அங்கத்துவப் பணம் பற்றிய விபரங்கள், மாவட்ட ரீதியாக உறுப்பினர்களின் விபரங்கள் ஆகியவற்றை பாதுகாத்து பேணுவார்.

ஈ) மாவட்ட அமைப்புகள், பிரதேச அமைப்புகள், வட்டார அமைப்புகள் ஆகியவற்றின் செயற்பாடுகளை மத்திய குழுவினதும், மாவட்ட அமைப்பாளரினதும் ஆலோசனையுடன் கண்காணித்து வழிநடாத்துவார்.

உ) தேர்தல் ஆணைக்குழுவுடனான தொடர்புகளைப் பேணுவார்.

ஊ) தேவையான சந்தர்ப்பத்தில், குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புகளை துணைச் செயலாளர் நிறைவேற்றிக் கொள்ள ஏதுவாக அதிகாரங்களை வழங்குவார்.

எ) ஏதேனும் ஒரு காரணத்தால், அடுத்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு முன்னதாக செயலாளர் பதவியில் வெற்றிடம் ஏற்படுமாயின், புதிய செயலாளர் ஒருவர் தெரிவு செய்யப்படும் வரையில், துணைச்செயலாளர் அவரது கடமைகளை மேற்கொள்வார். புதிய செயலாளர் தெரிவு குறித்து, மூன்றுமாத காலத்திற்குள் இடம்பெறும், 29 பேர் அங்கத்துவம் கொண்ட மத்தியகுழுக் கூட்டத்தில், அன்று கலந்து கொண்ட உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத அங்கத்தவர்களால் புதிய செயலாளர் தெரிவு செய்யப்படுவார்.

**4.3. பொருளாளர் -**

அ) கட்சியின் அசையும், அசையா சொத்துகள் அனைத்துக்கும் பொறுப்புக் கூறுபவராக செயற்படுவார்.

ஆ) கட்சியின் அசையும், அசையா சொத்துகள் அனைத்தையும் பாதுகாக்கின்ற, நிர்வகிக்கின்ற கடமையைக் கொண்டுள்ள “நிதி, ஆதன முகாமைத்துவக் குழு” வின் தலைவராக செயற்படுவார்.

இ) “நிதி, ஆதன முகாமைத்துவக் குழு”வின் உறுப்பினர் தொகையை தீர்மானிப்பதும், பொருளாளர் தவிர்ந்த ஏனை உறுப்பினர்களை தெரிவு செய்வதும் மத்தியகுழுவின் கடமையாகும்.

ஈ) அனைத்து நிர்வாகப்பிரிவுகளின் காலாண்டு அறிக்கைகளைப் பெற்று மத்திய குழுவுக்கு நிதி அறிக்கையை பாரப்படுத்துவ தோடு, மத்தியகுழுவின் தீர்மானத்திற்கமைய சகல நிதி நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட நிர்வாகப்பிரிவுகளில் நடைமுறைப்படுத்துவார்.

உ) கட்சிக்கு கிடைக்கும் நிதி அனைத்துக்கும் பற்றுச்சீட்டு வழங்குவதற்கும். உரிய அங்கீகாரத்துடனான பற்றுறுதிச் சீட்டுகள் (voucher) மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு மான அதிகாரத்தை கொண்டிருப்பார்.

ஊ) பொருளாளருடன், செயலாளர் அல்லது தலைவர் ஆகியோரில் ஒருவர் இணைந்து கையொப்பமிட்ட காசோலை மூலம் கட்சியின் வங்கிக் கணக்குகளில் இருந்து நிதியை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்வார்.

எ) நிதிச் செயற்பாடுகளின் அறிக்கைகளை தயாரித்து, தகுதி வாய்ந்த கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தலுடன் வருடாந்தம் தேர்தல் திணைக்களத்திற்கும், மூன்று வருடங்களுக்கொரு முறை நடைபெறும் பொதுச்சபைக் கூட்டத்தில் மத்திய குழுவின் அங்கீகாரத்துடனும் சமர்ப்பிப்பார்.

ஏ) கட்சியின் நிதியாண்டு, சித்திரை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அடுத்த ஆண்டு பங்குனி மாதம் முப்பத்தியோராம் திகதி வரையிலுமாக அமையும்.

**4.3.1 நிதி, ஆதன முகாமைத்துவக் குழு -**

அ) கட்சியின் பொருளாளரே நிதி, ஆதன முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாளராக செயற்படுவார்.

ஆ) நிதி, ஆதன முகாமைத்துவக் குழுவால் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் நிதிச் செயற்திட்டங்கள் மாவட்ட அமைப்பாளரிற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இ) நிதி, ஆதன முகாமைத்துவக் குழுவில் செயற்படும் உறுப்பினர்கள் எவரும் கட்சியின் நிதி முதலீடுகளில் பங்குபெறவோ அல்லது பயன்பெறவோ அனுமதிக்கப்பட மாட்டாது.

ஈ) கட்சிக்கு கிடைக்கும் வருமானங்கள் யாவும் நிதி, ஆதன முகாமைத்துவக் குழுவின் ஆலோசனையுடன் மீண்டும் மாவட்ட நிர்வாகங்களுக்கு தேவைக்கேற்ப வழங்கப்பட வேண்டும்.

உ) இலங்கைக்கு வெளியே இருந்து கிடைக்கப்பெறும் நிதி பற்றி நிதி, ஆதன முகாமைத்துவக் குழுவுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

**4.4. தேசிய அமைப்பாளர் -**

அ) இளைஞர் மற்றும் மகளிர் பிரிவுகளின் நடவடிக்கைகளை கண்காணித்தல், விரிவாக்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு பொறுப்பாக செயற்படுவார்.

4.5. மத்தியகுழுவின் ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்கள் அனைவரும் மத்தியகுழுவால் தீர்மானிக்கப்படுகின்ற பொறுப்புகளையும் அதற்கான கடமைகளையும் கொண்டிருப்பர்.

**5. பொதுச்சபை -**

5.1. மாவட்டங்கள் தோறும் உள்ள கட்சி அங்கத்தவர்களின் விகிதாசார எண்ணிக்கைக்கேற்ப மாவட்டங்கள் சார்ந்த பொதுச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை மத்தியகுழுவால் தீர்மானிக்கப்படும்.

5.2. பொதுச்சபையினதும், பொதுச்சபையினால் தெரிவுசெய்யப்படு கின்ற மத்தியகுழுவினது பதவிக்காலம் மூன்று (03) ஆண்டுகளாகும். மூன்று ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்பாக முப்பது (30) நாட்களுக்குள் மத்தியகுழுவைக் கூட்டி கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.3. பொதுச்சபைக் கூட்டத்திற்கான அறிவித்தல் மூன்று வாரங்களுக்கு முன்னர் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அழைக்கப்படும் உறுப்பினர்கள் அனைவரும் அங்கத்துவப் பணம் செலுத்தியவர்களாக இருத்தல் வேண்டும்.

5.4. விசேட பொதுச்சபைக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமாயின், மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கைக்கு குறையாத உறுப்பினர்களின் எழுத்துமூல கோரிக்கைக்கு அமைவாக, அல்லது விசேட காரணங்களின் அடிப்படையில் அதற்குரிய நிகழ்ச்சிநிரலை மட்டும் உள்ளடக்கியதாக ஏழு நாட்களுக்கு முன்னதான செயலாளரின் அறிவித்தலுடன் கூட்ட முடியும்.

5.5. அசாதாரண சூழ்நிலை காரணமாக பொதுச்சபையின் காலம் மாற்றப்பட வேண்டுமாயின், மாற்றம் குறித்த, இருபத்தொன்பது (29) பேர் அங்கத்துவம் வகிக்கும் மத்தியகுழுக் கூட்டத்தில், அன்று கலந்து கொண்ட உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத உறுப்பினர்களின் அனுமதி பெறப்பட்டு பொதுச்சபையின் காலத்தில் மாற்றம் செய்ய முடியும். பொதுச்சபையின் காலத்தை நீடிப்பதோ அல்லது குறைப்பதோ ஒரு வருட எல்லைக்குட்பட்டதாக அமைய வேண்டும்.

5.6. பொதுச்சபைக் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படும் வெளிநாடு வாழ் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது, பொதுச்சபைக் கூட்டத்திற்கு அழைக்கப்படும் மொத்த உறுப்பினர்களின் பத்து வீதத்திற்கு மேற்படாததாக அமைய வேண்டும்.

5.7. பொதுச்சபைக்கு அதிகரிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, தற்போதைய பொதுச்சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் பத்து வீதத்திற்கும் மேற்படாது இருக்க வேண்டும்.

5.8. பொதுச்சபையின் கூட்ட நிறைவு எண் (கோரம்) பொதுச்சபை உறுப்பினர்களின் இரண்டில் ஒரு பங்கு எண்ணிக்கைக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

**6. மாவட்ட, பிரதேச, வட்டார அமைப்புகள் -**

6.1. மாவட்ட, பிரதேச, வட்டார அமைப்புகள் யாவும் மத்தியகுழுவின் வழிகாட்டலில் இயங்கும்.

6.2. மாவட்ட அமைப்பாளர் மத்தியகுழுவினாலும், பிரதேச அமைப்பாளர் மாவட்டக்குழுவாலும், வட்டார அமைப்பாளர் மாவட்ட அமைப்பாளரின் ஆலோசனையுடன் பிரதேச அமைப்பாளராலும் நியமனம் செய்யப்படுவர்.

6.3. மாவட்ட, பிரதேச, வட்டார அமைப்புகளின் கட்டமைப்பை மத்தியகுழுவினதும், மாவட்ட அமைப்பாளரினதும் ஆலோசனையுடன் செயலாளர் தீர்மானிப்பார்.

6.4. மாவட்ட, பிரதேச, வட்டார அமைப்புகளானது மாதாந்தம் கூடி ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

**7. உறுப்பினர்களுக்கான விதிகள் -**

7.1. கட்சிக்குரிய நிதி, அசையும் அசையா சொத்துக்கள், ஆவணங்கள் ஏதும் உறுப்பினர் வசம் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் யாவும் கட்சியின் நிதி, ஆதன முகாமைத்துவக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

7.2. சகல உறுப்பினர்களுக்கும் உட்கட்சி விமர்சனங்களுக்கான உரிமை வழங்கப்படுகிறது . பொதுச்சபை, மத்தியகுழுக் கூட்டங்களிலும் மாவட்ட, பிரதேச நிர்வாகக் கூட்டங்களிலும் மட்டுமே விமர்சிக்க முடியும்.

7.3. கட்சியின் சக உறுப்பினர் சம்பந்தமான பகிரங்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் கட்சியின் உறுப்பினர் ஒருவர் பங்கு கொள்வது தடை செய்யப்படுகிறது. கட்சிக்கெதிரானவர்களின் பங்களிப்புடன் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தலும், அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படும் நிகழ்வுகளில் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்வதும் தடை செய்யப்படுகிறது.

7.4. குற்றச்சாட்டுக்கள் மற்றும் விளக்கம் கோரல்களை தலைவர் அல்லது செயலாளர் மூலமாக எழுத்து மூலம் முன்வைத்து பதிலை அல்லது தீர்வை பெறும் முறைமையை மேற்கொள்ளவேண்டும்.

7.5. தனிநபர் சம்பந்தமாக அல்லது மத்தியகுழுவின் தீர்மானம் சம்பந்தமாக தவறுகள் கண்டுபிடிக்கப்படின் அதனைத் தெரியப்படுத்த, எழுத்துமூல அறிக்கையினை தலைவர் அல்லது செயலாளருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

7.6. கட்சிக் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீதான நடவடிக்கைகள் மத்தியகுழுவால் தீர்மானிக்கப்படும்.

7.7. மாவட்ட அமைப்பு, மத்தியகுழு, பொதுச்சபை ஆகியவை பெரும்பான்மையுடன் தீர்மானிக்கும் விடயங்களுக்கு அவற்றில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களும் கட்டுப்பட வேண்டும்.

7.8. கட்சியின் நிகழ்வுகளில் வெளியிடப்படும் சகல ஆவணங் களிலும், பொருட்களிலும் பதியப்படும் விடயங்கள் கட்சி நிர்வாகிகளின் முன்அனுமதி பெற்றே செயற்படுத்தப்பட வேண்டும். வெளியார்கள் வழங்கும் நிதியாகிலும் மேற்படி நடைமுறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

7.9. கட்சியின் பெயரை சம்பந்தப்படுத்தி சமூகவலைத்தளங்கள் இயங்குவதில் கட்சி உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களிடம் விளக்கம் கோரப்படும். தொடர்ந்தும் தவறான முறையில் செயற்படின் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7.10. கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஏக காலத்தில் கட்சியின் நிர்வாகத்தில் ஒரு பதவியினை மட்டுமே வகிக்க முடியும்.

**8. அரசியல் பீடம் -**

அரசியல் பீடமானது, தலைவர், செயலாளர், பொருளாளர், தேசிய அமைப்பாளர், மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணிப் பொறுப்பாளர், மகளிர் அணிப் பொறுப்பாளர், ஊடகப் பொறுப்பாளர் ஆகியோரைக் கொண்டிருக்கும்.

**9. கட்சியின் சர்வதேச கிளைகளின் செயற்பாடுகள் பற்றிய தீர்மானங்கள் -**

9.1. சர்வதேச கிளைகளுடனான விடயங்களை கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் அடங்கிய மூவர் குழு கையாளும்.

9.2. வெளிநாடுகளில் செயற்படுகின்ற ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் கிளைகள் யாவும் நிர்வாக ரீதியாக மத்தியகு முவுக்கு கட்டுப்பட்டவையாக தனித்தனியே இயங்கும்.

9.3. வெளிநாட்டுக் கிளைகளின் நிர்வாகக் கட்டமைப்பானது கிளையின் அமைப்பாளரால் அங்குள்ள உறுப்பினர்களின் ஆலோசனையுடன் தீர்மானிக்கப்படும்.

9.4. கிளை நிர்வாகங்கள் அமைக்க முடியாத நாடுகளில், அதற்கான காரணங்கள் மத்தியகுழுவால் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் செயற்படக்கூடிய ஒருவர் அந் நாட்டின் செயற்பாட்டாளராக மத்தியகுழுவால் நியமிக்கப்படுவார்.

9.5. நிர்வாகக்குழு உறுப்பினர்களாக இருக்க விரும்புபவர்கள் அனைவரும் கட்சியின் பொதுச்சபைத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டவர்களாக இருப்பதுடன் உறுப்புரிமைப் பணம் செலுத்தியிருக்கவேண்டும்.

9.6. உறுப்புரிமைப் பணத்தின் அளவு பற்றி சம்பந்தப்பட்ட நாடுகளின் அமைப்பாளர், அங்குள்ள உறுப்பினர்களின் ஆலோசனை களைப் பெற்று முடிவு செய்வார்.

103

9.7. உறுப்புரிமைப் பணம் கட்டிய உறுப்பினர்கள் மட்டுமே, நிர்வாகக் கூட்டங்களிலும் பொதுச்சபைக் கூட்டத்திலும் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில் பங்குகொள்ள முடியும்.

9.8. உறுப்புரிமைப் பணம் தவிர்ந்த, கட்சியின் பேரிலான ஏனைய அனைத்து நிதிச் சேகரிப்புகளும் தலைவர், செயலாளர், பொருளாளர் அடங்கிய மூவர் குழுவின் அனுமதி பெறப்பட்ட பின்பே மேற்கொள்ளப்பட வேண்டும். கட்சியின் தேவைக்காக, கட்சியின் பெயரைப் பயன்படுத்தும் நிகழ்வுகளுக்காக சேகரிக்கப்படும் நிதியின் வரவு செலவு விபரங்கள் யாவும் பொருளாளருக்கு நிகழ்வுகள் முடிவுற்றவுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

9.9. கிளையின் செயற்பாடுகளில் ஏற்படும் பிணக்குகள் மற்றும் கிளை உறுப்பினர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளுக்கு சம்பந்தப்பட்ட நிர்வாகக்குழுவின் மட்டத்தில் தீர்வைப் பெற முயற்சிக்கவேண்டும். தேவையேற்படுமிடத்து மூவர்குழுவின் ஆலோசனை பெறப்படலாம்.

9.10. ஒவ்வொரு கிளையும், தமது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய செயற்பாடுகளையும், நிதிச் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய அரையாண்டு அறிக்கையினை செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

9.11. குறிப்பிட்ட செயற்திட்டம் ஒன்றிற்காக இணைந்து செயற்பட விரும்பும் கிளைகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மூவர்குழுவின் அனுமதிபெற்று இயங்கமுடியும்.

9.12. வெளிநாட்டுக் கிளைகள் மற்றும் நாடுகளுக்கான செயற்பாட்டாளர்கள் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் மத்தியகுழுவுக்கு பூரண அதிகாரம் வழங்கப்படுகிறது.

**10. யாப்பு விதிகள் பற்றியது -**

10.1. யாப்பு விதிகள் பற்றிய வியாக்கியானங்கள் தொடர்பாக வினவப்படும் விடயங்கள் பற்றி மத்தியகுழுவே முடிவெடுக்கும்.

10.2. 14.03.2026 ம் திகதி முதல் இவ்யாப்பு நடைமுறைக்கு வருவதோடு கட்சியின் முந்தைய யாப்புகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுகிறது.

10.3. கட்சியின் யாப்பு பயன்படுத்தப்படுகின்ற வேளைகளில் அதன் தமிழ் மொழிப் பிரதியே மூலப்பிரதியாக கொள்ளப்படும்.

10.4. கட்சி யாப்பின் எந்த பகுதியும் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் அல்லது யாப்புத் திருத்தம் குறித்து கூடுகின்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தில், கலந்து கொள்கின்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத உறுப்பினர்களின் அனுமதியுடன் மாற்றியமைக்க முடியும்.

**இணைப்புகள் -**

இணைப்பு (01) -
சின்னம் -

M.Pathmanathan
Secretary
Democratic People's Liberation Front
(D.P.L.F)



இணைப்பு (02) -
கொடி

2.1. கொடியின் நீளம் மற்றும் அகலம் ஆகியன 5:3 எனும் விகிதத்தில் அமைந்திருக்கும். கொடியின் மேற்கூறப்பட்ட அளவு 20' உயரமான கொடிக் கம்பத்திற்கு பொருத்தமானதாகும்.